பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

05 10 2026 7 15

திங்கட்கிழமை காலை

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா- பங்களாதேஷ் இடையே முதலாவது சர்வதேச சரக்கு கப்பல் சேவை இன்று தொடங்குகிறது.

2. இந்தியாவின் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்ட தருணங்களில் இந்தியாவுக்கு ஆதரவாக நின்ற நாடு ரஷ்யா என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. மூத்தகுடிமக்கள் நலனுக்காக புதிய சட்டவரைவு இம்மாதம் கேரள சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. Satheesan தெரிவித்துள்ளார்.

4. கர்நாடகம், கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. 17 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஆசியக்கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று ஈராக்கை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><>

இந்தியா- பங்களாதேஷ் இடையே முதலாவது சர்வதேச சரக்கு கப்பல் சேவை இன்று தொடங்குகிறது.

அசாம் மாநிலம் திப்ருகரில் இன்று இந்த சேவையை மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் அசாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வாஸ் ஷர்மா, காணொளி வாயிலாக பங்கேற்கிறார்.

முதலாவது சரக்கு கப்பலில் அசாம் பெட்ரோ கெமிக்கல் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மெத்தனால் வங்கதேசத்தின் டாக்காவில் உள்ள பங்காவோன் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட உள்ளது.

இரு நாடுகளுக்கிடையிலான சரக்குக் கப்பல் பிரம்மபுத்திரா நதி வழியாக சென்று பங்களாதேஷை அடைய உள்ளது.

சுதந்திரத்திற்கு பிறகு முதன்முறையாக அசாமில் இருந்து வெளிநாடு ஒன்றிற்கு சரக்குக் கப்பல் நேரடியாக செல்லவிருப்பது இதுவே முதன்முறையாகும்.

வடகிழக்கு மாநிலங்களில் குறைந்த செலவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவதில் மத்திய அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இந்தியா – பங்காளதேஷ் சரக்குக் கப்பல் சேவை அமைந்துள்ளது.

<><><><><>

இந்தியாவின் பாதுகாப்புக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்ட தருணங்களில் இந்தியாவுக்கு ஆதரவாக நின்ற நாடு ரஷ்யா என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற முனிச் பாதுகாப்பு மாநாட்டில் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், இந்தியாவுக்கு மிக அருகில் இருந்த ஒரு நாட்டில் நடைபெற்ற ராணுவ ஆட்சியை உலகின் பெரும்பாலான நாடுகள் ஆதரவு அளித்த போதிலும் ரஷ்யா ஆதரவளிக்கவில்லை என்று கூறினார்.

அந்த காலக்கட்டத்திலும் ரஷ்யாவுடனான இந்தியாவின் உறவு மிகவும் வலுவாக இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக பல்வேறு காலக்கட்டங்களில் இரு நாடுகளுக்கிடையிலான உறவு வரலாற்று பாரம்பரியத்தை கடந்து விரிவடைந்துள்ளதாகவும் அது தற்போது குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதா உறவாகவும் மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா – ரஷ்யா உறவில் ராணுவம், அணுசக்தி, விண்வெளி உள்ளிட்ட பல்வேறு துறைகள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் மேலும் கூறினார்.

<><><><><>

ஓய்வூதியதாரர்களின் கோரிக்கைகள் குறித்த குறைதீர்க்கும் முகாம், மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தலைமையில், புதுதில்லியில் இன்று நடைபெறவுள்ளது.

மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற, ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் 897பேருக்கு, நீண்ட காலமாக தீர்வு காணப்படாமல் உள்ள கோரிக்கைகள், நாளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என பணியாளர் நலன் மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2017-ம் ஆண்டிலிருந்து இதுவரை நடத்தப்பட்ட 16 குறைதீர்ப்பு முகாம்களில் பெறப்பட்ட மனுக்களில் 71 சதவீதத்திற்கும் அதிகமான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டிருப்பதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

நாளை நடைபெறும் நிகழ்ச்சியில், குடும்ப ஓய்வூதியம் பெறுவோரின் பல்வேறு சந்தேகங்களுக்கான பதில்கள் அடங்கிய புத்தகம் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது.

<><><><><>

மூத்தகுடிமக்கள் நலனுக்காக புதிய சட்டவரைவு இம்மாதம் கேரள சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. Satheesan தெரிவித்துள்ளார்.

கொல்லம் அருகே பரவூரில் நேற்று நடைபெற்ற மூத்த குடிமக்கள் தின விழாவை தொடங்கி வைத்து பேசிய அவர், கேரளாவில் மூத்த குடிமக்களின் மக்கள்தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதாக கூறினார். அதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வலுவான சமூக பாதுகாப்பு வசதிகளை உறுதி செய்ய வேண்டியது மாநில அரசின் கடமை என்று கூறினார்.

மூத்த குடிமக்களுக்கு சட்ட பாதுகாப்பு உத்தரவாதமும் வழங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள புதிய சட்டமசோதாவில் அவர்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

படுக்கையில் இருக்கும் முதியவர்கள், நினைவாற்றால் குறைபாடுள்ளவர்கள் ஆகியோருக்கு தேவைப்படும் சிறப்பு சிகிச்சைகளை உள்ளடக்கியதாக புதிய சட்டம் இருக்கும் என்றும் கேரள முதலமைச்சர் கூறினார்.

<><><><><>

திரிபுரா மாநிலத் தலைநகர் அகர்தலாவில் செயல்படுத்தப்பட்டு வரும் பொலிவுறு நகர திட்டம் மாநிலத்தில் உள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. மானிக் சாஹா தெரிவித்துள்ளார்.

நேற்று அகர்தலாவில் நடைபெற்ற மாநகராட்சி விழாவில் பங்கேற்று பேசிய அவர், உள்ளாட்சி அமைப்புகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்த முன்னோடி திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

சமூகத்தில் ஒவ்வொரு தனிநபரையும் வளர்ச்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகளுடன் இணைப்பதே மாநில அரசின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில ஆண்டுகளாக அகர்தலாவில் நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும், இதனால் மக்களுக்கு சுத்தமானகுடிநீர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு கழிவுநீர் வடிகால்களும் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு. மானிக் சாஹா கூறினார்.

<><><><><>

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், ஸ்விட்சர்லாந்து அதிபர் திரு. Guy Parmelin னும் புதுதில்லியில் இன்று இருதரப்பு பேச்சுகளை நடத்த உள்ளனர்.

மூன்று நாள் அரசுமுறை பயணமாக ஸ்விட்சர்லாந்து அதிபர் புதுதில்லி வந்துள்ளார்.

அவருடன் அந்நாட்டின் உயரதிகாரிகள், வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் அடங்கிய குழுவும் வந்துள்ளது.

வர்த்தகம், முதலீடு, அறிவியல் தொழில்நுட்பம், புதுமையான கண்டுப்பிடிப்புகள், கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடியும், ஸ்விட்சர்லாந்து அதிபர் திரு. Guy Parmelin னும் விவாதிக்க உள்ளனர்.

ஸ்விட்சர்லாந்து அதிபர் இன்று மாலை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முவையும் சந்தித்து பேச உள்ளார்.

இந்தியாவுடன் நீண்டகாலமாக நட்பு நாடாக உள்ள ஸ்விட்சர்லாந்து, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இந்தியாவுடன் வர்த்தகம் புரியும் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாகும்.

ஸ்விட்சர்லாந்து அதிபரின் வருகை இருதரப்பும் பயன் அடையும் வகையில் புதிய துறைகளில் ஒத்துழைப்பை விரிவுப்படுத்த உதவும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><>

தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் உள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர் டாக்டர். தாரேஸ் அகமது கூறியுள்ளார்.

இன்று சென்னையில் டெங்கு தடுப்புப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் டெங்கு தடுப்புப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

டெங்கு மேலாண்மை குறித்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் டாக்டர். தாரேஸ் அகமது கூறியுள்ளார்.

<><><><><><>

நாட்டில் நெடுஞ்சாலைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்து, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை, நாளை ஆலோசனை நடத்தவுள்ளது.

மத்திய – மாநில அரசுகளின் நெடுஞ்சாலைத்துறை உயர் அதிகாரிகள், கட்டுமான நிறுவனங்கள் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவுள்ளதாக, சாலைப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கூட்டத்தின் தொடக்க அமர்வில், மத்திய அமைச்சர் திரு.நிதின் கட்கரி, இணையமைச்சர்கள் திரு.அஜய் தம்தா மற்றும் திரு.ஹர்ஷ் மல்ஹோத்ரா ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

நாடு முழுவதும், நெடுஞ்சாலைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதுடன், சாலைப் பணிகளில் புதுமையான அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துவது குறித்து விவாதிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சாலைப் பணிகளை விரைந்து முடிப்பது, தர மேம்பாடு, சாலைப் பாதுகாப்பு, செலவின சிக்கனம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளதாக, சாலைப் போக்குவரத்து அமைச்சகம் கூறியுள்ளது.

<><><><><><><>

ஈரான் – அமெரிக்கா இடையிலான பிரச்சினைகளுக்கு, ராணுவத் தாக்குதல் அல்லது பொருளாதாரத் தடைகள் மூலம் தீர்வுகாண முடியாது என்று ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.சையது அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.

டெஹ்ரானில் வெளிநாட்டுத் தூதர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய அவர், ராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தை மூலமே, தீர்வுகாண முடியும் என்று கூறினார்.

ஈரான் மீது ராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டால், அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் என்றும் திரு.சையது அப்பாஸ் அராக்சி எச்சரித்துள்ளார்.

<><><><><><>

உத்தரப்பிரதேச மாநிலத்தில் கோமதி ஆற்றின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வரும நிலையில் மாநில அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நதியின் தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள லக்னோ நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உத்தரவின்படி மாவட்ட ஆட்சியர் திரு. விஷாக் உள்ளிட்ட உயரதிகாரிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இம்மக்களுக்கு மாநில அரசின் சார்பில் நிவாரணப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

<><><><><><>

கர்நாடகம், கேரளாவில் சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வுமையம் கூறியுள்ளது.

சத்தீஸ்கர், உத்தரகண்ட், தெலங்கானா, மேற்குவங்கம் லட்சத்தீவு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகலாந்து, திரிபுரா, மிசோரம், மணிப்பூர் மாநிலங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><>

17 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஆசியக்கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று ஈராக்கை எதிர்கொள்கிறது.

மலேசியாவின் Selayang -ல் இந்தப்போட்டி நடைபெற உள்ளது.

---

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2-வது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்க உள்ளது.

இன்று காலை 9-30 மணிக்கு அஹமதாபாத்தில் இந்தப்போட்டி தொடங்க உள்ளது.

ஏற்கனவே நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது.

<><><><><><>

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற இந்திய கால்பந்து சங்கத்தின் ஷீல்டு கோப்பைக்கான அரையிறுதிப் போட்டியில் நடப்புச் சாம்பியன் மோஹன் பஹன் அணி 4 – 3 என்ற கோல் கணக்கில் பஞ்சாப் அணியை வென்றது.

இன்று நடைபெற உள்ள இரண்டாவது அரையிறுதியில் ஈஸ்ட் பெங்கால் அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

<><><><><>